## நிதி, திட்டம் என நம் உரிமைகள் பறிப்பு – டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்குமான தேர்தல்:

# டெல்லி அணியை ஓட ஓட விரட்ட வேண்டும் - தமிழ்நாடு அணி வென்றுகாட்ட வேண்டும்!

### காங்கேயத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களை ஆதரித்து

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!



**திருப்பூர்,ஏப். 20 –**

**திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் காங்கேயம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மு.பெ.சாமிநாதன், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர் டி.இந்திராணி ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``தொகுதி மறுவரையறையைச் சரியாக அமல்படுத்தவில்லை என்றால், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறையும். 59 வர வேண்டியதற்கு பதில் 47 தான் கொடுப்போம் என்று ஒன்றிய பா.ஜ.க அரசு அடம் பிடிக்கிறது. இப்பொழுது நிதி, திட்டம் என நம் உரிமைகள் எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் தான் நம் தமிழ்நாடு முதலமைச்சர் நம் தலைவர் சொல்கிற மாதிரி, இந்தத் தேர்தல் டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்குமான தேர்தல். டெல்லி அணியை ஓட ஓட விரட்ட வேண்டும். தமிழ்நாடு அணி நாம் வென்று காட்ட வேண்டும்” என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன்” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

முதலில் இவ்வளவு சிறப்பான, அன்பான, எழுச்சியான வரவேற்பைக் கொடுத்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

#### உதயசூரியன் சின்னம்

இந்த வரவேற்பைப் பார்க்கும்போது ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. காங்கேயம் தொகுதியிலும், தாராபுரம் தொகுதியிலும் நம் வெற்றி உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நான் உங்களையெல்லாம் நம் காங்கேயத்தில் நம் வெற்றி வேட்பாளர், நம் அமைச்சர் அண்ணன் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும், தாராபுரம் வெற்றி வேட்பாளர் சகோதரி மருத்துவர் இந்திராணி அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் அனைவரும் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வதற்காகத்தான் வந்தேன். ஆனால், இங்கே வந்து பார்த்த பிறகுதான் தெரிகிறது, நீங்கள் எல்லாம் ஏற்கனவே முடிவெடுத்துவிட்டீர்கள் என்று. உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, தாராபுரம் மற்றும் காங்கேயத்தில் சென்ற முறை வாங்கியதை விட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

நேற்று மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் எல்லா தொகுதிகளிலும் பிரச்சாரம் செய்து விட்டு இன்று காலையில்தான் திருப்பூர் மாவட்டத்துக்குள் நுழைகிறேன். திருப்பூர் மாவட்டத்தில் முதல் நிகழ்ச்சி. உங்களின் எழுச்சியையும் உற்சாகத்தையும் பார்க்கும்பொழுது, இந்தத் திருப்பூர் மீண்டும் தி.மு.க-வின் கோட்டை என்பதை நிரூபிக்கப் போகிறீர்கள் என்று தெரிகிறது.

#### உழைப்புக்கு எடுத்துக்காட்டு

இந்தத் திருப்பூர் மாவட்டம் எப்பொழுதுமே தொழிலாளர்கள் நிறைந்த மாவட்டம். தொழில் நிறுவனங்கள் அதிகமாக இருக்கக் கூடிய மாவட்டம். உழைப்புக்கும் தொழில் வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய மாவட்டம் இந்தத் திருப்பூர் மாவட்டம். இந்தத் திருப்பூர் மாவட்டத்தின் வளர்ச்சி அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டும் என்றால், மீண்டும் நம் திராவிட மாடல் ஆட்சி அமைய வேண்டும். சங்கிக் கூட்டத்தை உள்ளே விட்டோம் என்றால், இந்த மாவட்டத்தின் வளர்ச்சியைக் கெடுத்துவிடுவார்கள், அடியோடு நிறுத்திவிடுவார்கள். தொழில் வளர்ச்சி அதிகரிக்க வேண்டும் என்றால், தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், அது நம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் மட்டும்தான் முடியும் என்பதை நாம் அடிக்கடி உணர்த்திக் காட்டியிருக்கிறோம்.

இதை உணர்ந்து திருப்பூர் மாவட்ட மக்கள் கழகத்துக்கு, உதயசூரியன் சின்னத்துக்கு, காங்கேயத்தில் அண்ணன் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும், தாராபுரத்தில் சகோதரி மருத்துவர் இந்திராணி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும் வாக்களித்து இந்த இரண்டு தொகுதியின் வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

#### சிறப்பாகப் பணியாற்றியவர்

அண்ணன் சாமிநாதன் அவர்களைப் பற்றி நான் உங்களிடம் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. அவரை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. உங்கள் அனைவருக்கும் தெரிந்தவர்தான் அண்ணன் சாமிநாதன் அவர்கள். அமைச்சராக இரண்டு முறை மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர். இந்த காங்கேயம் தொகுதியின் வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களை இந்தப் பகுதிக்குக் கொண்டு வந்தவர். 40 ஆண்டு காலம் கழகத்தில் இளைஞர் அணியில் இணைந்து படிப்படியாக முன்னேறி இன்று மாவட்டக் கழகச் செயலாளராக, இப்பொழுது கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகத் தன் பணி மூலம் ஒவ்வொரு படியாக முன்னேறி வருபவர். கழகப் பணி, மக்கள் பணி இரண்டிலும் சிறப்பாகச் செயல்படக் கூடியவர்தான் அண்ணன் வெள்ளக்கோவில் சாமிநாதன் அவர்கள். எப்பொழுதும் சிரித்த முகத்தோடு, மகிழ்ச்சியோடு யாரைப் பார்த்தாலும் பேசுபவர். வெறும் தேர்தலுக்குத் தேர்தல் வந்து உங்களைப் பார்க்கக்கூடியவர்கள் கிடையாது இவர்கள் இரண்டு பேரும். என்றைக்கும் உங்களோடு இருக்கக்கூடியவர்கள்.

வருடம் முழுவதும் உங்களோடு, உங்களின் சுக துக்க நிகழ்ச்சி அனைத்திலும் பங்கேற்று உங்கள் குடும்பத்தில் ஒருவராக இருக்கக்கூடியவர்கள்தான் அண்ணன் சாமிநாதன் அவர்களும், சகோதரி இந்திராணி அவர்களும். இவர்களை இந்த முறை சட்டமன்றத்துக்கு அனுப்பி வையுங்கள். அதைத் தவற விட்டுவிடாதீர்கள்.

#### காங்கேயம் திட்டங்கள்

அண்ணன் சாமிநாதன் அவர்களை வெற்றி பெற வைத்தீர்கள் என்றால் இந்த காங்கேயத்தின் வளர்ச்சியை நிச்சயம் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வார். இந்த காங்கேயத்துக்குப் பல்வேறு திட்டங்களை, சாதனைகளை நாம் செய்திருக்கிறோம். எடுத்துக்காட்டிற்குச் சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்டத் தலைமை மருத்துவமனையை, தரம் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்.

வட்டமலைக்கரை ஓடை அணைக்குச் சுமார் 22 ஆண்டுகளுக்குப் பிறகு பி.ஏ.பி (PAP) திட்டத்தின் கீழ் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தண்ணீர் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

காவேரி ஆற்று நீரை வள்ளியிறைச்சல் மற்றும் மேட்டுப்பாளையம் பகுதிகளுக்குப் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

சென்னிமலை ஒன்றியத்துக்குள் 434 ஊரகக் குடியிருப்புகளுக்கு 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம்.

திருப்பூர் மாவட்டத்தில் இனாம் நிலங்களில் ஏற்பட்டுள்ள பூஜ்ஜிய மதிப்புக் குறைகளைச் சரி செய்யச் சிறப்பு மாவட்ட அலுவலர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். கோயில் நிலங்களில் உள்ள பிரச்சினைகளும் நிச்சயம் தீர்க்கப்படும்.

வெள்ளக்கோவில் நகரப் பகுதியில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி நிலையம். வாரச் சந்தையை மேம்படுத்த 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிவன்மலையில் மலைக்கோயிலுக்குச் செல்லப் புதிய தார் சாலை அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

அமராவதி ஆற்றுக்கு அருகே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அணை கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிரம்மாண்டமான காங்கேயம் காளை சிலை வைத்துக்கொடுத்திருக்கிறோம்.

தாசவநாயக்கன்பட்டியில் புதிய துணைச் சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

#### வெற்றி பெறச் செய்யுங்கள்

இப்படிப் பல்வேறு திட்டங்களை இந்தப் பகுதிக்குச் செய்து கொடுத்திருக்கிறோம். அந்த உரிமையில் உங்களிடம் மீண்டும் காங்கேயத்தில் உதயசூரியன் உதிக்க வேண்டும். அதற்கு அண்ணன் வெள்ளக்கோவில் சாமிநாதன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும்.

நம் தாராபுரம் வேட்பாளர் மருத்துவர் இந்திராணி அவர்கள். கடந்த முறை இங்கே நம் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்கள் வெற்றி பெற்றார்கள். அதை விட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் நம் வெற்றி வேட்பாளர் இந்திராணி அவர்களை, ஒரு மருத்துவர், கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர், படித்தவர். இவரின் சொந்த சகோதரி அக்கா சாந்தகுமாரி இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக ஏற்கனவே மக்கள் பணியாற்றியிருக்கிறார். இந்திராணி அவர்கள் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளராகச் சிறப்பாகச் செயல்பட்டதால் இன்று நம் தலைவர் அவர்கள் இந்த வாய்ப்பை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து உங்களுக்குப் பணி செய்யக் காத்திருக்கிறார்கள் இந்த இரண்டு பேரும். இவர்கள் இரண்டு பேரையும் வெற்றி பெற ச் செய்யுங்கள்.

இப்பொழுது இந்தத் தொகுதிக்கு என்னென்ன செய்திருக்கிறோம் என்று கூறிவிட்டேன். இந்த ஐந்து வருடம் தமிழ்நாட்டுக்கு நம் திராவிட மாடல் அரசு என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

#### கட்டணமில்லா பேருந்து திட்டம்

ஆட்சி அமைந்த உடனே நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து, மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து திட்டம். ஒவ்வொரு மகளிரும் மாதம் 900 வரை சேமித்திருக்கிறார்கள்.

அரசுப் பள்ளிக்குச் சென்றால், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். கல்லூரிக்குப் படிக்கச் சென்றால் கல்வி ஊக்கத்தொகை மாதம் 1,000 ரூபாய். இப்பொழுது சமீபத்தில் மூன்று மாதங்களுக்கு முன்பு 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினித் திட்டத்தை அறிவித்து, முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இன்று ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிர், மகளிர் உரிமைத் தொகை மூலம் பயன்பெற்று வருகிறார்கள். இந்த மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை நிறுத்துவதற்கு அ.தி.மு.க-வும் பா.ஜ.க-வும் முயற்சி செய்தார்கள். தேர்தலை காரணங்காட்டி நீதிமன்றத்துக்குச் சென்று உரிமைத் தொகையை நிறுத்துவதற்கு முயற்சி எடுத்தார்கள். ஆனால் நம் தலைவர் முதலமைச்சர் என்ன செய்தார், 1,000 ரூபாய் கொடுப்பதை நிறுத்த முயற்சி செய்கிறாயா, நான் 5,000 ரூபாய் கொடுப்பேன் என்ன செய்வாய் பார்ப்போம் என்று கொடுத்தார். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மூன்று மாதங்களுக்குச் சேர்த்து 3,000, கோடைகால சிறப்பு நிதி 2,000 என்று 5,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். முதலமைச்சர் காலையில் 6 மணிக்கு மகளிருடைய வங்கிக் கணக்கில் பணத்தைப் போட்டுவிட்டார்கள். மகளிர் என்ன செய்தீர்கள், 9 மணிக்கு வங்கி திறப்பதற்கு முன்னாடியே சென்று பணத்தை எடுத்துவிட்டீர்கள். ஏனென்றால் மோடி அரசு உரிமைத் தொகையில் கை வைத்துவிடப் போகிறார்கள், வங்கிக் கணக்கில் குறைந்தபட்ச இருப்பு இல்லை என்று சொல்லி மோடி அரசு அந்தப் பணத்தை எடுத்துவிடுவார்கள் என்று கவனமாகச் சென்று அன்றைக்குக் காலையிலேயே 9 மணிக்கெல்லாம் பணத்தை எடுத்துவிட்டீர்கள்.

#### புதிய வாக்குறுதிகள்

சில வாக்குறுதிகளை இந்த முறை நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார். மகளிர் உரிமைத் தொகை திட்டம் 1,000 ரூபாய் கிடையாது அதை உயர்த்தி 2,000 ரூபாய் தருவோம் என்று முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பு வரை கிடையாது, எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறோம்.

கல்வி ஊக்கத் தொகை 1,000 ரூபாய் கிடையாது, 1,500-ஆக உயர்த்தப்படும் என்று சொல்லியிருக்கிறோம். முதியோர் உதவித்தொகை 1,200-லிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அடுத்த 5 வருடத்தில் 10 லட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அவர்களுக்கு வீடு கட்டித் தருவோம் என்று சொல்லியிருக்கிறோம்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறோம் உங்களுக்குத் தெரியும். ஆட்சி அமைந்த உடனே முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிர் கைகளிலும் 8,000 ரூபாய் முதலமைச்சர் ஒப்படைத்துவிடுவார்கள். மகளிர் அவர்கள் வீட்டுக்கு என்ன மின்சாதனப் பொருட்கள் தேவை என்பதை அவர்களே முடிவு செய்யட்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்துவிட்டார்.

நம் திராவிட மாடல் ஆட்சி அமையப் போவது உறுதி. அதற்கு மேலும் வலு சேர்க்கிற விதமாக அண்ணன் சாமிநாதன் அவர்களையும் சகோதரி இந்திராணி அவர்களையும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்துச் சட்டமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதல் இடத்துக்கு வர வேண்டும்

23-ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்றீர்கள் என்றால் வாக்குப் பெட்டியில் ஒரே பெட்டிதான், காங்கேயத்தில் ஒரே பெட்டி அதில் இரண்டாவது இடம் அண்ணன் மு.பெ.சாமிநாதனின் பெயர் இருக்கும். அதற்குப் பக்கத்தில் உதயசூரியன் சின்னம் இருக்கும். அதில் வாக்களித்து வாக்கு எண்ணிக்கையில் முதல் இடத்துக்கு வர வேண்டும்.

அதே மாதிரி தாராபுரத்தில் சகோதரி இந்திராணி அவர்களுக்கு வாக்களித்து அவர்கள் வாக்குப் பெட்டியிலேயே முதல் எண்தான். இன்னும் சுலபம். தாராபுரத்தில் வாக்குப் பெட்டியில் முதல் பெயர் சகோதரி இந்திராணியின் பெயர். அதற்குப் பக்கத்தில் உதயசூரியன் சின்னம் அதில் வாக்களித்து, இந்த இரண்டு பேரையும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றிபெற வைக்க வேண்டும்.

#### உலகப் புகழ்பெற்ற புகைப்படம்

நீங்கள் அரசியலில் ஒரு முரட்டு பக்தரைப் பார்த்திருப்பீர்கள், முரட்டுத் தொண்டர் கேள்விப்பட்டிருப்பீர்கள், ஆனால் ஒரு முரட்டு அடிமையைப் பார்த்திருக்கிறீர்களா. இவ்வளவுதான் விஷயம் முடிந்தது. இதைத் தான் சொன்னேன். இதைச் சொன்னதற்குத் தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள் என்ன சொல்லிவிட்டார் என்றால் உதயநிதிக்கு எந்த அனுபவமும் கிடையாது அவருக்கு என்ன அனுபவம் இருக்கிறது என்று கேட்டார். நான் சொன்னேன் ஆமாம் எனக்கு அனுபவம் கிடையாது தான். இதோ இந்த அனுபவம் எனக்குக் கிடையாது என்று சொன்னேன். இந்தப் புகைப்படத்தைப் பார்க்கத்தான் அவ்வளவு ஆசைப்பட்டீர்களா. இது பெரிய உலகப் புகழ்பெற்ற புகைப்படம் ஆகிவிட்டது இப்பொழுது. நான் காட்டவில்லை நீங்கள் கேட்டதனால் காண்பித்தேன். அவர் என்னை இப்பொழுது கன்னாபின்னாவென்று திட்டுகிறார். செத்துப் போயிருக்கலாம் என்கிறார் என்னை. என் உயிரை வாங்குகிறான் என்கிறார். இது எனக்குத் தேவையா?

#### மாநில உரிமைகள் பறிப்பு

நம் தலைவர் சொல்கிற மாதிரி இதை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் வரும் சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாடு வெர்சஸ் டெல்லிக்கும் நடப்பது. டெல்லியை இந்த முறை வீழ்த்தியாக வேண்டும். நான் இன்று இவ்வளவு திட்டங்கள் சொன்னேன் அல்லவா, யோசித்துப்பாருங்கள் இதற்கெல்லாம் ஒன்றிய பா.ஜ.க அரசு எந்த விதத்திலாவது நமக்கு உதவி இருக்கிறதா. தமிழ்நாட்டுக்கான திட்டங்கள் கொடுக்கிறார்களா. நாம் கேட்கிற நிதியைக் கொடுக்கிறார்களா எதுவுமே கொடுப்பது இல்லை.

தமிழ்நாட்டைத் தொடர்ந்து டெல்லி புறக்கணித்துக்கொண்டிருக்கிறது. ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ்நாட்டைத் தொடர்ந்து புறக்கணிக்கிறது. கல்வி நிதி கொடுப்பது இல்லை. தமிழ்நாட்டின் உரிமையை ஒவ்வொரு மாநில உரிமைகளாகப் பறித்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்பொழுது பார்த்தீர்கள் என்றால் நேற்று தொகுதி மறுவரையறையை கொண்டு வருவோம் என்கிறார்கள். இந்தத் தொகுதி மறுவரையறையைச் சரியாக அமல்படுத்தவில்லை என்றால், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறையும். 59 வர வேண்டியதற்கு பதில் 47 தான் கொடுப்போம் என்று ஒன்றிய பா.ஜ.க அரசு அடம் பிடிக்கிறது. இப்பொழுது நிதி, திட்டம் என நம் உரிமைகள் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதனால்தான் நம் தமிழ்நாடு முதலமைச்சர் நம் தலைவர் சொல்கிற மாதிரி, இந்தத் தேர்தல் டெல்லிக்கும் தமிழ்நாட்டுகுமான தேர்தல். டெல்லி அணியை ஓட ஓட விரட்ட வேண்டும். தமிழ்நாடு அணி நாம் வென்று காட்ட வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன். பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்.

அண்ணன் சாமிநாதன் அவர்களுக்கு காங்கேயம் தொகுதியிலும், தாராபுரம் தொகுதியில் சகோதரி இந்திராணி அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்துச் சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள்.

உங்களின் வரவேற்புக்கு நன்றி நன்றி நன்றி.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தாராபுரம் வேட்பாளர் மருத்துவர் இந்திராணி, மண்டலப் பொறுப்பாளர் சக்கரபாணி, மாவட்டக் கழகச் செயலாளர் பத்மநாபன், அமைச்சர் கயல்விழி செல்வராஜ், வடக்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் கணேஷ், காங்கேயம் தொகுதிப் பார்வையாளர் கண்ணப்பன், முத்துக்குமார், பிரபாவதி பெரியசாமி, கே.எஸ்.தனசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் கருணாகரன், சிவகுமார், கார்த்திகேயன், மெய்யப்பன், ஒன்றிய நகரப் பகுதிப் பேரூர்க் கழகச் செயலாளர்கள் பிரபு, செல்வம் (எ) தமிழ்செல்வன், கருணைப் பிரகாஷ், சிவானந்தம், சந்திரசேகரன், சிவப்பிரகாஷ், செந்தில்குமார், துரைசாமி, தமிழரசு, பழனிசாமி, மலையப்பன், முருகானந்தம், ராமசாமி, குப்புசாமி, அன்பரசு, பன்னீர்செல்வம், தண்டபாணி, சுரேஷ், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் யுவராஜ், செல்வராஜ், வீரகாளி வெங்கடேஷ், ரவிச்சந்திரன், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்துச் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.